| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| முனைவர்.சி.உஷாராணி,<br>எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | செய்தி ஆசிரியர்,<br>அனைத்து செய்தி ஊடகங்கள். |

**ந.க.எண். 062376/பி1/2019** **நாள் : 30.12.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** **2019–2020-ம் கல்வி ஆண்டு மார்ச் 2020 எஸ்.எஸ்.எல்.சி. பொதுத்தேர்வு – தனித்தேர்வர்கள் – அறிவியல் பாட செய்முறை பயிற்சி வகுப்புகளில் இதுநாள்வரை சேராமல் விடுபட்ட தனித்தேர்வர்கள் செய்முறைப் பயிற்சி வகுப்பில் சேருதல் – செய்திக்குறிப்பு வெளியிடுதல் – சார்ந்து.**

******

2019-2020-ம் கல்வி ஆண்டு, மார்ச் 2020-ல் நடைபெறவுள்ள எஸ்.எஸ்.எல்.சி. பொதுத்தேர்வுக்கு விண்ணப்பிக்கவுள்ள தனித்தேர்வர்களுள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தேதிகளில் **அறிவியல் பாடத்தில் செய்முறைப் பயிற்சி வகுப்பில் பெயர்களை பதிவு செய்யத் தவறிய தனித்தேர்வர்கள் 06.01.2020 முதல் 13.01.2020 வரை பயிற்சி வகுப்பில் சேருதல்** குறித்த **"செய்திக்குறிப்பு"** இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. இச்செய்திக்குறிப்பினை இணைப்பில் உள்ளவாறே அனைத்து தனித்தேர்வர்களும் மற்றும் பொது மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் தங்களது நாளேடுகள் மற்றும் தொலைக்காட்சியில் செய்தியாக வெளியிடவும் மற்றும் ஒலி/ஒளி பரப்பிடவும் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**"இது விளம்பரம் அல்ல"** எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இணைப்பு :** செய்திக் குறிப்பு

**நகல்**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

– தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைகாகவும் அனுப்பப்படுகிறது

## <u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006</u>

## மார்ச் 2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு அறிவியல்பாட செய்முறைப் பயிற்சி வகுப்பில் சேர்தல் தொடர்பான

# செய்திக் குறிப்பு

நடைபெறவுள்ள மார்ச் 2020, பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுத விரும்பும் நேரடித் தனித்தேர்வர்களுள், இவ்வியக்ககத்தால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தேதிகளில் **<u>அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்பில் சேரத் தவறிய தனித்தேர்வர்கள், 06.01.2020 (திங்கட் கிழமை) முதல் 13.01.2020 (திங்கட் கிழமை)</u>** வரை சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களை அணுகி, பதிவுக்கட்டணமாக **ரூ.125/–** ஐச் செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் மாவட்டக் கல்வி அலுவலர்களால் ஒதுக்கீடு செய்யப்படும் பள்ளிகளுக்குச் சென்று அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள வேண்டுமெனவும் அறிவிக்கப்படுகிறது.

மேலும், அறிவியல் பாட செய்முறை பயிற்சி வகுப்பிற்கு பதிவு செய்த உடன், மாவட்டக் கல்வி அலுவலரால் வழங்கப்படும் பயிற்சி வகுப்பில் சேர்ந்ததற்கான விண்ணப்ப அத்தாட்சி சீட்டைப் பெற்று அவரவர் கல்வி மாவட்டத்தில் அமைந்துள்ள அரசுத் தேர்வு சேவை மையத்தில் சமர்ப்பித்து விட்டு, மார்ச் 2020 எஸ்.எஸ்.எல்.சி. பொதுத்தேர்விற்கு **<u>06.01.2020 முதல் 13.01.2020 வரை</u>** அறிவியல் பாடம் கருத்தியல் உட்பட விண்ணப்பிக்கத் தகுதியான பாடங்களுக்கும் (அனைத்து / தவறிய பாடங்கள்) அச்சேவை மையங்களின் மூலம் தனியாக ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

**<u>குறிப்பு:</u>**

1. எட்டாம் வகுப்பு தேர்வில் ஆங்கிலத்துடன் தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் ஒன்பதாம் வகுப்பு பயின்று தேர்ச்சி அல்லது இடையில் நின்ற மாணாக்கர்கள், தேர்வுத்துறையால் நடத்தப்படும் எட்டாம் வகுப்பு (ESLC) பொதுத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்களும் முதல் முறையாக பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் நேரடித் தனித் தேர்வர்கள் புதிய பாடத்திட்டத்தில் அறிவியல் பாடம் கருத்தியல் / செய்முறைத் தேர்வு எழுது வேண்டும்.

2. மார்ச் 2019–ல் தேர்வெழுதி அறிவியல் பாடத்தில் கருத்தியல் தேர்வில் தேர்ச்சி பெற்று செய்முறைத் தேர்வில் தோல்வியுற்றுருப்பின் தோல்வியுற்ற செய்முறைத் தேர்வில் மட்டுமே தேர்வெழுதினால் போதுமானது (மார்ச் 2019–ல் இருந்த பாடத்தில்)
3. 2012–ஆம் ஆண்டிற்கு முன்பு அறிவியல் பாடத்தில் தோல்வியுற்ற மாணாக்கர்கள் பழைய பாடத்திட்டத்தில் (2019–ல் இருந்த பாடத்திட்டம்) அறிவியல் பாடத்தில் கருத்தியல் மற்றும் செய்முறைத் தேர்வெழுத வேண்டும்.

அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்பில் சேர்வதற்கான விண்ணப்பத்தினை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் **06.01.2020 முதல் 13.01.2020 வரை** பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பயிற்சி வகுப்புகள் நடைபெறும் நாள் மற்றும் மையம் போன்ற முழுவிவரங்களை அறிய அந்தந்த மாவட்டக் கல்வி அலுவலரை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**ஒம்/–**
**இயக்குநர்**

**சென்னை – 600 006.**
**நாள் : 30.12.2019**

**2019-2020 ஆம் கல்வியாண்டு, மார்ச் 2020–ல் நடைபெறவுள்ள பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் கலந்து கொள்ள நடத்தப்பெறும் செய்முறை பயிற்சி வகுப்புகளில் பதிவிற்கான விண்ணப்பம்.**
**(விண்ணப்பம் இரண்டு படிவங்களில் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)**

சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம் ஒட்டவும்

1. தேர்வரின் பெயர் :
2. தாயார்/தந்தையார்/பாதுகாவலர் பெயர் :
3. பாலினம் :
4. பிறந்ததேதி :
5. 01.03.2020 அன்றுள்ளபடி வயது :
6. நிரந்தர முகவரி :
7. அஞ்சல் முகவரி :
8. கல்வித் தகுதி :
9. செய்முறை வகுப்பில் பயில விரும்பும் மொழி :
10. மாற்றுத் திறனாளியாக இருப்பின் எவ்வகையைச் சார்ந்தவர் ? :
11. தேர்வுக் கட்டண விவரம் தொகை ரூ.125/– பணமாக செலுத்த வேண்டும் :
12. தொலைபேசி/கைபேசி எண் :
13. ரூ.5/–ற்கான சுயமுகவரியிடப்பட்ட அஞ்சல் உறை இணைக்கப்பட்டுள்ளதா ? :

மேலே தெரிவிக்கப்பட்ட தகவல்கள் யாவும் உண்மை என உறுதியளிக்கிறேன்.

பெற்றோர் /பாதுகாவலரின் கையொப்பம்

விண்ணப்பதாரரின் கையொப்பம்.
இடம்:
நாள்:

---

**அலுவலக உபயோகத்திற்கு மட்டும்**

ஒதுக்கீடு செய்யப்பட்ட செய்முறை வகுப்பிற்கான மையம்

இருக்கை உதவியாளர் கண்காணிப்பாளர் மாவட்டக் கல்வி அலுவலர்.

---

**பற்றுச்சீட்டு**

ரூ.125/– (ரூபாய் நூற்றி இருபத்தைந்து மட்டும்) ------- (பிறந்த தேதி) ---------

என்பவரிடமிருந்து மார்ச் 2020 ல் நடைபெறும் SSLC தேர்வு அறிவியல் செய்முறைப் பயிற்சிக்காக பணமாக பெறப்பட்டது.

**கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை**

**Application for Enrollment to Practical Training Classes for the SSLC Public Examination to be held in the academic year 2019-2020**

**(This form should be submitted in Duplicate to the respective District Educational Office)**

Affix here a recent Passport size Photo

| | | |
|---|---|---|
| 1 | Name of the Applicant | : |
| 2 | Father's Name/Mother's Name/Guardian's Name | : |
| 3 | Sex | ; |
| 4 | Date of Birth | : |
| 5 | Age as on 01.03.2020 | : |
| 6 | Permanent Residential Address | : |
| 7 | Address for Communication | : |
| 8 | Educational Qualification | : |
| 9 | Medium chosen for Practical classes | : |
| 10 | State whether Physically challenged. If, so mention the nature of physical challenge | : |
| 11 | Fee Particulars Amount Rs.125/- by cash | : |
| 12 | Contact Phone Number | : |
| 13 | Whether Self Addressed cover with Postal stamp for Rs.5/- enclosed | : |

I do hereby declare that the particulars given above are true and to the best of my knowledge.

Signature of the Parent/Guardian

Signature of the Student
Place:
Date:

---

For office use only

Name of Practical Class Centre Allotted:

Seat Assistant Superintendent DEO

---

Receipt

Received Rs.125/-(Rupees One Hundred and twenty five only) from --------- D.O.B. -------------by cash towards SSLC March 2020 Science Practical training fees.

Signature with office seal